(இ) வேலைகள் நடப்பு நிதியாண்டிற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டிலே அனுமதிக்கப்பட்டும் இன்னும் அந்தப் பணிகள் முடிவடையவில்லை. இதற்கு முக்கியமான காரணம், மாவட்டம் முழுவதற்கும் ஒரே ஒரு அரிசன நல அதிகாரி இருந்துகொண்டு, மேற்பார்வை செய்ய இயலவில்லை. ஆகவே, ஒன்றிய இன்ஜினியர் களைக்கொண்டு அந்த வேலைகளை, எக்ஸிகுயூஷன் வேலைகளை மட்டும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாவட்ட நல அதிகாரி அல்ல இந்தத் தாமதத்திற்கெல்லாம் பொறுப்பு, இயந்தி ரங்கள் வாங்க, அது சரியா என்று டெண்டர் கேட்க, குறைந்த விலைபற்றிப் பரிசீலிக்க இவைகளுக்கெல்லாம் உதவிப் பொறியாளர், கட்டிடப் பொறியாளர் இவர்களெல்லாம்தான் அந்த வேலையிலே ஈடுபடுகிறார்கள். மாவட்ட நல அதிகாரிக்கு இவர்களெல்லாம் துணையாக இருக்கிறார்கள். எனவே, அங்கேதான் தாமதம் ஏற்படுகிறதே தவிர, மாவட்ட நல அதிகாரியால் தாமதம் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்டமுன்வடிவு

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

1974 சனவரி 25]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச் சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

THIRU B. VENKATASWAMY : Sir, on behalf of the Swatantra Party, I wish to offer a few remarks on the Governor's Address to the joint session.

In the Governor's Address, the current burning problems have not been mentioned, namely, the soaring prices due to inflation, the student unrest, scarcity of essential articles, unemployment problem, the prohibition policy, etc. How to face and solve these problems is a very great and big question to be answered. All these things have been omitted in the Governor's Address.

Coming to the anicuts, there are so many anicuts in the State which have to be constructed. But so far, no action has been taken in the Fifth Five-Year Plan also. I understand that some anicuts have been included but due to shortage of funds both from the Centre and in the State, simply they have been postponed.

Coming to tanks, there are so many tanks. about 2,000 odd tanks in our State but we are not in a position to desilt them. I do not know the reason why no steps have been taken by the Government. These tanks were constructed at the time of Rajahs and Zamindars. The Government has not done any desilting and given sufficient water to the ryots. At the same time, so many people have encroached these tank beds, the water-spread and therefore vigorous steps should be taken to evict these encroachments. Otherwise, the catchment of the tanks will be diminished and we will not be in a position to produce more good grains.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY CHENNAI 600 009 வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS